# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032,
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண். 093 /2016/பேரூராட்சி

ஆணை எண். 85/2016

நாள்: 03 /05 /2016

நுகர்வோர் நல பாதுகாப்பு பேரவை செயலாளர்,
43/4, வடக்கிருப்பு,
அண்ணாமலை நகர், சிதம்பரம் தாலுகா,
கடலூர் மாவட்டம் – 608 002.

மனுதாரர்

செயல் அலுவலர்,
அண்ணாமலை நகர் பேரூராட்சி,
கடலூர் மாவட்டம்

எதிர் மனுதாரர்

## ஆணை

நுகர்வோர் நல பாதுகாப்பு பேரவை செயலாளர், அண்ணாமலை நகர் பேரூராட்சி என்பவரிடமிருந்து வரப்பெற்ற (18.01.2016) முறையீடு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (மனு தாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல் ) விதிகள், 2015ன் விதி 4–ல் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு உரிய படிவத்திலும் விதி 6–ல் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு கட்டணம் ரூ.10/– (பத்து மட்டும்) மதிப்பிலான நீதி மன்ற கட்டண வில்லை (Court Fee Stamp) ஒட்டியும் தாக்கல் செய்யப்படவில்லை.

எனவே, மேற்படி விதியின், விதி 8 (1 )–ன் படி மனுதாரரது அசல் மனு திருப்பி அனுப்பி வைக்கப்படுகிறது. இருப்பினும் முறையீட்டினை குறை நிவர்த்தி செய்திட ஏதுவாக உரிய படிவத்தின் நகல் இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

மேலும், குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு விதிகளின்படி மனுதாரரது முறையீடு தாக்கல் செய்யப்படும் நேர்வில் விதி 8 (2 )– ன் படி பதிவு செய்யப்பட்டு உரிய விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என இம்முறை மன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2016 ஆம் ஆண்டு மே திங்கள் 03 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

ஓம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

<u>இணைப்பு</u>

1. அசல் மனு
2. படிவ நகல்

<u>பெறுநர்</u>

நுகர்வோர் நல பாதுகாப்பு பேரவை செயலாளர்,
43/4, வடக்கிருப்பு,
அண்ணாமலை நகர், சிதம்பரம் தாலுகா,
கடலூர் மாவட்டம் –608 002.